**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 97** **நாள்: 13.07.2018**

**காசநோயாளிகள் ஊட்டச்சத்து உதவித்தொகையினை பெற வங்கிக் கணக்கு எண் விவரங்களை காசநோய் பணியாளர்களிடம் தெரிவிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

உலகில் உள்ள காசநோயாளிகளில் 4ல் ஒரு பங்கு நோயாளிகள் இந்தியாவில் உள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. இந்நோயை கட்டுப்படுத்தும் விதமாக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. 2025ம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்திருக்கிறது.

இதன் முன்னோடியாக சென்னையை காசநோய் இல்லாத சென்னையாக உருவாக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 09.10.2017 அன்று துவக்கி வைத்தார்கள். சென்னை மாநகராட்சியின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் காசநோயை ஒழிப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆனணயாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, காசநோயாளிகள் சிகிச்சை காலத்தில் அவர்களுடைய ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காகவும், இதனால் அவர்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், நிக்ஷை போசன் யோஜனா (NIKSHAY POSHAN YOJANA) என்னும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக காசநோயாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.500/- சிகிச்சை காலம் முடியும் வரை உதவித்தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தில் காசநோய் சிகிச்சை ஆரம்பிக்கும் பொழுதே வங்கிக் கணக்கு விவரங்கள் பெறப்படும். இந்த உதவித்தொகை 2 மாதங்களுக்கு ஒருமுறை அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

கடந்த ஏப்ரல் 1ஆம் தேதி தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலமாக இதுவரை சென்னை மாவட்டத்தில் 138 காசநோயாளிகளுக்கு முதல் தவணை தொகையாக ரூ.1000/- அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு வங்கி கணக்கு ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கடந்த வருடம் அக்டோபர் (2017) முதல்

பதிவுசெய்யப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கும் இத்தொகை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, ஆதார் எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற விவரங்களை காசநோயாளிகள் அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள காசநோய் பணியாளர்களிடம் கட்டாயம் தெரிவிக்கவேண்டும். இத்திட்டத்தை காசநோயாளிகள் பயன்படுத்தி பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**